# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஆகஸ்ட் 3, 2019

Weekly E-paper • AUGUST 27, 2019




# முத்தலாக் தடையா? முஸ்லிம் அச்சுறுத்தலா?

• வெற்றிச்செல்வன்



## உதவாக்கரைத் தீர்ப்பாயம்.

மா. உமாபதி

## இது சர்வாதிகாரம்

தலையங்கம்



## அண்ணாவின் தம்பிநீ

சுப.வீரபாண்டியன்

கருஞ்சட்டைத் தமிழர்
ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்
வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஆகஸ்ட் 3, 2019 Weekly E-paper ● AUGUST 27, 2019

# முத்தலாக் தடையா? முஸ்லிம் அச்சுறுத்தலா?

● வெற்றிச்செல்வன்



முத்தலாக் தடை மசோதா எனப்படும் முஸ்லிம் பெண்கள் திருமண உரிமைகள் பாதுகாப்புச் சட்டம் *[Muslim Women (Protection of Rights in marriage) Act, 2019]* நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு, குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்துள்ளதையடுத்து சட்டமாகியுள்ளது.

முத்தலாக் என்றால் என்ன?

இஸ்லாமிய ஆண்கள், தங்கள் மனைவியை விவாகரத்து செய்து திருமண பந்தத்தில் இருந்து வெளியே வரவேண்டுமானால், தலாக் என்ற சொல்லை, வெவ்வேறு சந்தர்ப்பங்களில் மூன்று முறை சொல்லவேண்டும். ஆனால், இந்தியாவில் வசிக்கும் இஸ்லாமியர்களில் ஆண் தனது மனைவியிடம் ஒரே சமயத்தில் மூன்று முறை தலாக் சொன்னாலும் அவர்களுடைய விவாகம் ரத்தாகிவிட்டதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

முஸ்லிம் ஆண்கள் உடனடியாக மூன்று முறை தலாக் கூறி விவாகரத்து செய்யும் நடைமுறை செல்லாது என்று உச்ச நீதிமன்றம் கடந்த 2017-ஆம் ஆண்டு தீர்ப்பளித்தது. மேலும் முத்தலாக்குக்குத் தடை விதிக்கும் வகையில் சட்டம் இயற்ற மத்திய அரசுக்கு உத்தரவிட்டது. அதன்படி, மத்திய அரசு தற்போது இச்சட்டத்தை நிறைவேற்றியுள்ளது.

முத்தலாக் தடைச் சட்டத்தின்படி முஸ்லிம் கணவர்கள், தங்களின் மனைவிக்கு உடனடியாக முத்தலாக் கூறியதாக மனைவி புகார் அளித்தால், அது குற்றமாகும், அதற்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை வழங்கப்படும்.

பெண்களின் உரிமையை மறுப்பதில் எந்த மதமும் விதிவிலக்கல்ல. திருமண உறவில் பெண்களின் உரிமை பாதுகாக்கப்படவேண்டும் என்பது சரியான வாதம்தான். ஆனால், உரிமையியல் சார்ந்த இந்த விவகாரத்தைக் குற்றவியல் விவகாரமாக மாற்றியதே இச்சட்டத்தை ஐயத்திற்கு உள்ளாக்குகிறது.

சாயிரா பானு வழக்கில் ஏற்கெனவே முத்தலாக் செல்லாது என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது. எனவே, முத்தலாக் சொன்னாலும் அது திருமண முறிவுக்கு வழிவகுக்காது என்ற நிலையில், இது உரிமையியல் பிரச்சனையாக இருந்து குற்றவியல் பிரச்சனையாக மாற்றப்பட்டுள்ளது

இச்சட்டத்தின்படி, முத்தலாக் சொல்லும் கணவனுக்கு 3 ஆண்டு சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். வழக்குத் தொடுக்கும் மனைவிக்கு, சிறையில் இருக்கும் காலகட்டத்தில் பராமரிப்பும் வழங்க வேண்டும்.

"அப்படிச் சிறையில் இருக்கிற கணவன் எப்படி அந்தப் பெண்ணுக்கு ஜீவனாம்சம் வழங்க முடியும்?"

கணவனைச் சிறையில் அடைத்தால், திருமண வாழ்வு நீடிக்காது. சிறையில் இருக்கும்போது அவரால் பராமரிப்புச் செலவுக்குப் பணம் தர முடியாது என்பதால் மனைவியும் குழந்தைகளும் இன்னலுக்கு ஆளாகவே நேரிடும்.

வேறு எந்த மதத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இவ்வாறு மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனை என்பது இல்லாத நிலையில் இஸ்லாமியர்களுக்காகவென்று இப்படி ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ள காரணத்தாலேயே, இந்தச் சட்டம் முஸ்லிம் பெண்களின் மீதான இரக்கத்தினால் அல்ல, முஸ்லிம் ஆண்களைச் சிறையில் தள்ளும் நோக்கத்துடனேயே நிறைவேற்றப்பட்டுள்ளது என்பது தெளிவாகிறது.

ஏற்கெனவே சிறுபான்மை மக்களின் நலன்களுக்கு எதிராகச் செயல்பட்டு வரும் பாஜக அரசு, இச்சட்டத்தைக் கொண்டு வந்திருப்பதன் மூலம் இசுலாமிய மக்களை அச்சுறுத்தலுக்கு ஆளாக்கியுள்ளது.

இது ஒருபுறமிருக்க, மக்களவையில் ஆதரித்தும், மாநிலங்களவையில் எதிர்த்தும் இரட்டை நிலைப்பாடுகளை எடுத்தது, அதிமுக அரசின் தெளிவற்ற போக்கினை வெளிப்படுத்தியுள்ளது. ●

# உதவாக்கரை ஒரே நதிநீர்த் தீர்ப்பாயம்.

● பொள்ளாச்சி மா. உமாபதி

ஒரே நாடு ! ஒரே தேர்தல்! ஒரே மதம்! ஒரே கல்வி ! ஒரே ஆதார் அட்டை ! ஒரே வரி ! ஒரே ரேஷன்! ஒரே உணவு! ஒரே உடை ! என்று இந்தியாவின் பன்முகத்தன்மையை சிதைத்து ஒற்றைக்கலாச்சாரம் என்கின்ற திசையை நோக்கிச் செல்கின்ற பாஜக அரசு இப்போது ஒரே நதிநீர் ஆணையம் என்கின்ற ஒன்றைத் திணிக்க முயல்கிறது. பன்முகத் தன்மைதான் இந்தியாவின் அடித்தளம்- அடையாளம். அந்த அடையாளத்தைச் சிதைத்து ஒற்றைக் கலாச்சாரம் என்பது பாசிசப் போக்கு.. உடல் என்பது கை , கால், வயிறு, இதயம், தலை, கண், காது, என்று பல்வேறு உறுப்புகளைக் கொண்டிருக்க வேண்டும் . ஒவ்வொன்றும் சரியாகச் செயல்பட வேண்டும் . ஒரே ஒரு உறுப்பு மட்டும் மொத்த உடலாகாது, ஆக முடியாது. அதுபோல்நமது நாடு பல்வேறு கலை, இலக்கியம், மொழி, பழக்கவழக்கங்களைக் கொண்டது. அவை பாதுகாக்கப் பட வேண்டும். ஒற்றைக் கலாச்சாரம் ஆபத்தில் தான் போய் முடியும்.



தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் அதன் மிகப்பெரிய பிரச்சினை காவிரி நதிநீர்ப் பங்கீடுதான்.1924 இல் வெள்ளையர் ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட காவிரி நதி நீர் ஒப்பந்தம் 1974இல் புதுப்பிக்கப்பட்டிருக்கவேண்டும். அப்போது மத்தியில் ஆண்ட காங்கிரஸ் அரசின் தமிழக விரோதப் போக்கால் அந்த ஒப்பந்தம் புதுப்பிக்கப்படாமல் இழுத்தடிக்கப் பட்டது. அதன் பின் நெருக்கடிநிலையில் கழக அரசு கவிழ்க்கப்பட்டுக் குடியரசுத் தலைவர் ஆட்சி கொண்டுவரப்பட்டது .அதன் பின் 13 ஆண்டுகாலம் எம்ஜிஆரின் ஆட்சியில் முறையான எந்த முடிவும் எட்டப்படவில்லை. 1989இல் மீண்டும் திமுக ஆட்சிப் பொறுப்பேற்றபின், மத்தியில் சமூகநீதிக் காவலர் விபி சிங் அவர்கள்பிரதமரான பின் காவிரி நடுவர் மன்றம் அமைக்கப்பட்டது. அதனுடைய இறுதிப் தீர்ப்பு வெளியாக 17ஆண்டுகள் பிடித்தன. 2007இல் வெளியான நடுவர்மன்றத்தீர்ப்பு பல்வேறு தடைகளைத்தாண்டி 2013இல்தான் அரசிதழில் வெளியானது. காவிரி இறுதித் தீர்ப்பை நிறைவேற்ற நான்கு நாளில் காவிரி மேலாண்மை ஆணையம் அமைக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பை இதுவரை நிறைவேற்றாமல் இருப்பதுடன், அந்தத் தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசே உச்சநீதிமன்றம் சென்று தடை வாங்கி விட்டதால் தமிழகத்தின் உரிமை அநியாயமாக, மனிதாபிமானமின்றி மறுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இப்போது ஒரே நதிநீர்த் தீர்ப்பாயம் என்கிறது பாஜக அரசு..இது குறித்துத் திமுக தலைவர் தளபதி முக ஸ்டாலின் அவர்கள் கூறுகையில் ," தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய நீதியைக் கால வரம்பு இன்றி ஒத்தி வைப்பதற்கான மிகப்பெரிய அபாய அறிவிப்பாக இது இருக்கிறது. அதுமட்டுமின்றி தமிழகத்திற்கு இறுதித் தீர்ப்பின்படி கிடைக்க வேண்டிய உரிமைகள் மேலும் பல ஆண்டுகள் கால தாமதம் ஆகும் நிலை திட்டமிட்டு ஏற்படுத்தப் படுகிறதோ என்ற பலத்த சந்தேகம் தமிழக மக்களுக்கும், விவசாயப் பெருங்குடி மக்களுக்கும் எழுகிறது. ஆகவே இனியும் காவிரி நதிநீர் உரிமைக்காகத் தமிழகத்தைக் கால வரையறையின்றிக் காத்திருக்க வைக்க மத்திய அரசு மேற்கொள்ளும் இந்த பாரபட்சமான முயற்சியைக் கைவிட வேண்டும். காவிரி மேலாண்மை வாரியத்தையும், ஒழுங்காற்றுக் குழுவையும் உடனே அமைத்திட வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்." என்று குறிப்பிட்டுள்ளார்.

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பங்கீடு பிரச்னையைத் தீர்க்க ஒரே தீர்ப்பாயத்தை அமைப்பதற்கான சட்டத் திருத்த முன்வடிவு மக்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பட்டாலும், காவிரி மேலாண்மை ஆணையம் தொடர்ந்து செயல்படும் என அமைச்சர் உறுதி அளித்துள்ளார். மத்திய அரசு தருகின்ற இவ்விதமான உறுதிமொழிகளை நம்ப முடியுமா?

முன்னர் இருந்த Finance Commission என்னும் நிதிக்குழு ஆணையத்தைக் கலைத்துவிட்டு நிதி ஆயோக் என்னும் திட்டத்தை முன் வைத்தனர். அதனால் இப்போது மாநிலஅரசுகள் தங்கள் உரிமைகளை, நிதித்தேவைகளை கேட்கமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதுபோலவே நீட் தேர்வு பிரச்சனையிலும் தமிழகத்துக்கு ஓராண்டு காலநீட்டிப்பு என்று முதலில் கூறிய மத்திய அமைச்சர்கள், அதனை அந்த ஆண்டே கொண்டு வந்து தமிழகத்தை வஞ்சித்தனர். ஒவ்வொன்றிலும் ஏற்கனவே இருந்த அமைப்புகளை மாற்றி, சிதைத்து, புதிய அமைப்புகளைக் கொண்டு வந்து அவற்றின் மூலம் மாநில அரசுகளின் அதிகாரங்களைப் பறித்து வருகிறது . தனக்கு எந்த விதத்திலும் ஆதரவாக இல்லாத தமிழ்நாட்டை வஞ்சித்துக் கெடுப்பது பாஜகவின் செயல் திட்டமாக உள்ளது. தமிழர்கள் விழித்து எழவேண்டிய காலம் இது.

பாஜகவின் இந்த பாசிசப் போக்குகளைப் பார்க்கும்போது பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்களின் பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது.

அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு
அகந்தைக் குரங்கு தாவும் – அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பும் ஒடிந்து கொடியும் குலைந்து
குரங்கும் விழுந்து சாகும்.

●

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்
www.keetru.com
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-2472 6408




## திண்டுக்கல் கருத்தரங்கம்




27-07-2019 அன்று ‘தீக்கதிர்’ ஆசிரியர் குமரேசன் எழுதிய ‘நம்பிக்கைகளும் மூட நம்பிக்கைகளும்’ என்ற நூல் அறிமுகக் கூட்டம் திண்டுக்கல் பேரவைத் தோழர்களால் நடத்தப்பட்டது. கூட்டத்திற்குத் தோழர் திண்டுக்கல் பார்த்திபன் தலைமை ஏற்றார். தோழர் புலேந்திரன் திறனாய்வுரையாற்ற, தோழர் அரசெழிலன் வரவேற்புரையாற்றினார். தோழர்கள் கி. ரவிசந்திரன், ஞானசேகரன், தமிழினியன், ஆனந்தராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## இது சர்வாதிகாரம்



அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்த (அலங்) கோலங்கள் ஆகிக் கொண்டிருக்கின்றன, நாடாளுமன்றத்தில் மசோதாக்கள்.

விவாதிப்பதற்குச் சரியான தகவல்கள் தயாரிக்கக் கூட முடியவில்லை, அடுத்த நாள் என்ன மசோதா தாக்கல் செய்வார்கள் என்று தெரியவில்லை, அவையின் அலுவல் பட்டியலை முதல் நாள் இரவில் மாற்றுகிறார்கள் என்று எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டுகின்றன.

எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்புகளையும் மீறி இப்பொழுது ‘தேசிய மருத்துவ ஆணைய’ மசோதா நிறைவேற்றப் பட்டிருக்கிறது.

1956ஆம் ஆண்டு ‘இந்திய மருத்துவ கவுன்சில்’ சட்டம் கொண்டு வரப்பட்டது.

63 ஆண்டுகள் நடைமுறையில் இருக்கும் இச்சட்டத்தில் ஊழல் மலிந்து விட்டதாகக் கூறி, இதற்குப் பதிலாகத் தேசிய மருத்துவ ஆணையத்தைக் கொண்டுவருகிறது மத்திய அரசு.

ஒரே இந்தியா, ஒரே மொழி, ஒரே பண்பாடு என்ற ஆர்.எஸ்.எஸ்/ பாஜக கொள்கை வழி நாடுமுழுவதும் இனி மருத்துவத்திற்கும் ஒரே ‘நெக்ஸ்ட்’ எனும் தேர்வை கொண்டுவருகிறார்கள்.

நீட் தேர்வைப் போல இந்த நெக்ஸ்ட் தேர்விலும் தேறினால் தான் மருத்துவராகத் தொடர முடியும்.

வெளிநாடுகளில் மருத்துவம் படித்திருந்தலும் அவர்களுக்கும் நெக்ஸ்ட் என்பது தகுதித் தேர்வாக வரப்போகிறது.

அடுத்த மூன்று ஆண்டுகளில் இத்தேர்வு நடைமுறைக்கு வர இருக்கிறது.

இந்த மசோதா குறித்து, நாடாளுமன்ற நிலைக்குழு அளித்த பரிந்துரைகளை ஏற்காமல், அதனை முற்றிலும் நிராகரித்து விட்டு மசோதா நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

இம்மசோதாவில் திருத்தங்கள் கோரி ஏறத்தாழ 20ஆயிரத்திற்கும் மேற்பட்ட மருத்துவர்கள் போராட்டத்தில் இறங்கியிருக்கிறார்கள்.

இவைகளை எல்லாம் கிஞ்சித்தும் கருத்தில் கொள்ளாமல், எடுத்தேன் கவிழ்த்தேன் என்று மத்திய அரசு நடந்து கொள்வது நாட்டின் நலனுக்கு ஏற்றது இல்லை.

புதிய கல்விக் கொள்கை, முத்தலாக் போன்று சரியான விவாதமில்லாமல், விவாதித்து எதிர்க்கட்சிகள் சொல்கின்ற திருத்தங்கள் எதையும் செய்யாமல், மசோதாக்களை மட்டுமே நிறைவேற்றிக் கொண்டிருப்பது மக்களிடையே ஐயத்தை ஏற்படுத்துகிறது.

ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே என்பதைப் போல, நிறைவேற்றப் பட்டுக்கொண்டிருக்கும் ஒவ்வொரு மசோதாவுக்கும் பின்னால் பாதிப்புகள் வர இருக்கின்றன என்பது மட்டும் புரிகிறது.

இது சர்வாதிகாரத்தின் உச்சம்.

# அண்ணாவின் தம்பிநீ, எங்கள் அண்ணன்!



கடந்துவிட்டோம் ஓராண்டைக் கலைஞர் இன்றி
கனிவான துணிவான தலைவா உன்றன்
தடம்பற்றித் தான்நடந்தோம் அதனால் தானே
தமிழ்நாட்டின் திசையெங்கும் வெற்றி கண்டோம்
விடமாட்டோம் ஒருநாளும் திராவி டத்தை
வேர்காக்கும் விழுதாகி நிற்போம் வெல்வோம்!
தொடமாட்டோம் மதவெறியை சாதி நஞ்சை
தொழமாட்டோம் எதிரிகளை மண்டி யிட்டே!

நெருப்பாறு நமைநோக்கி வருகு தென்ற
நிலையைநாம் மறுக்கவில்லை இருந்த போதும்
நெருக்கடியைப் பலமுறைநாம் சந்தித் துள்ளோம்
நேர்நின்றே புயல்மழையைப் புறங்கண் டுள்ளோம்
வருவதெலாம் வரட்டும்நம் தோள்கள் தாங்கும்
வருங்காலம் தனிலும்நம் புகழே ஓங்கும்
பெருமைமிகு உன்பெயரே ஆயு தம்தான்
பிழைபட்டோர் கத்திவெறும் காகி தம்தான்

அலைகடலின் ஓரத்தில் ஓய்வு கொண்ட
அண்ணாவின் தம்பிநீ எங்கள் அண்ணன்
கலையுண்டு இலக்கியங்கள் பலவும் உண்டு
கனிவான உரைநடையும் பேச்சும் உண்டு
நிலையில்லா உலகத்தில் நிலையாய் வாழ
நீதந்த சிந்தனைகள் நெஞ்சில் உண்டு
விலையில்லாத் தமிழ்ச்சொத்தே வெற்றிக் கோவே
விண்முட்டும் புகழோடு என்றும் வாழ்வாய்!

சுப.வீரபாண்டியன்

# காந்திமதி
## பாட்டியைப் போல வாழ வேண்டும்

‘நாங்க பெரியார் கட்சி’, ‘இப்ப இருக்குற பிள்ளைங்க தப்ப தட்டிக்கேக்க பயப்படுறீங்க, நானெல்லாம் கையில அருவா எடுத்து சத்தம் போட்டன்னா ஒரு பய எதிர்ல நிக்கமாட்டான்’ ‘ஒரு கையில புள்ளைங்களயும், இன்னொரு கையில புருசனயும் புடிச்சிக்கிட்டு மாநாட்டுக்குப் போயிடுவோம்’ காந்திமதிப் பாட்டிக்கு 90 வயதிருக்கும்போது, அவரிடம் பேசிக்கொண்டிருந்த ஒரு மாலை நேரத்தில் என் கையை அழுத்தியபடி சொன்னவை. அந்தப் பெரியார் பெருந்தொண்டர் காந்திமதியம்மாள் கடந்த ஜூலை மாதம் 12ஆம் தேதி 100ஆவது வயதை எட்டிப்பிடித்த நேரத்தில் காலமானார்.

1930களிலேயே அருப்புக்கோட்டை ச.வீ.க.முத்துச்சாமி என்னும் திராவிடர் கழகத்தவரைச் சாதி மறுப்புத் திருமணம் செய்து கொண்டார். இயக்கமே குடும்பம், கொள்கையே வாழ்க்கை என இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர். 1947இல் மதுரையில் நடந்த திராவிடர் கழகக் கருஞ்சட்டை மாநாட்டுப் பந்தலுக்குத் தீ வைக்கப்பட்டபோது, உயிர்தப்ப ஏறிய பேருந்தையும் வன்முறையாளர்கள் ஆயுதங்களுடன் மறிக்கின்றனர். கைக்குழந்தையாக இருந்த மகன் தமிழரசனையும், கணவரையும், வன்முறையாளர்களுடனும், காவல்துறையினருடனும் போராடி மீட்கிறார் காந்திமதியம்மாள். கணவருடைய மறைவுக்குப் பிறகும், இயக்கப் பணிகளில் முழுவீச்சுடன் ஈடுபட்ட காந்திமதியம்மாளின் தலைமையில், எண்ணற்ற சாதி மறுப்பு, சுயமரியாதைத் திருமணங்கள் நடைபெற்றிருக்கின்றன.

பெண்ணிற்குக் கல்வி கிடைத்தால் ஒரு சமூகமே பயன்பெறும் என்பதால்தான் திராவிட இயக்கம் பெண் கல்விக்கு முதலிடம் தருகிறது. கல்வி மட்டுமன்று, கொள்கையும், ஒரு பெண்ணின் வழியாகத் தலைமுறை தலைமுறைக்கும் கடத்தப்படும் என்பதற்குக் காந்திமதியம்மாள் மிகச் சிறந்த சான்றாக வாழ்ந்து மறைந்திருக்கிறார்.

தான் பற்றிநின்ற கொள்கையையும், அந்தக் கொள்கை தந்த துணிச்சலையும் அப்படியே தன்னுடைய பேத்தி ஓவியாவிற்குக் கடத்தியிருக்கிறார். ஓவியா ஏ.பி.வள்ளிநாயகம் இணையரின் மகன் ஜீவசகாப்தன், ஜீவசகாப்தன் - சமீம் இணையரின் பிள்ளைகள் இதயச் சிற்பி, நிலவன் என ஐந்தாவது தலைமுறையாகத் தொடர்கிறது காந்திமதியம்மாள் ஊட்டிய கொள்கை உறுதி.



மறைந்த காந்திமதியம்மாளின் உடல் சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களின் படிப்புப் பயன்பாட்டுக்காகக் கொடையாக வழங்கப்பட்டது.

நிறைய காந்திமதிகளை உருவாக்க வேண்டும்... நாமும் காந்திமதிப் பாட்டியைப் போல வாழ்ந்து காட்ட வேண்டும்.

- இரா.உமா

Published By Dravida Iyyakka Tamilar Peravai. . Editor Suba. Veerapandian,